விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 26 சனி 11.09.2021 மலர் - 2, இதழ் - 158

# சொந்த காலில் நிற்கத் தெரியாத காங்கிரஸ்



ஒரு காலத்தில் தேச விடுதலைக்காக போராடிய கட்சியான காங்கிரஸ் கட்சி, அதன் தலைவர்களின் பேராசை, தேச நலனில் அக்கறையின்மை, வாரிசு அரசியல், திறமையற்ற தலைமை போன்ற பல்வேறு காரணங்களால், தற்போது தன் சொந்த பலத்தை இழந்து மற்றவர்களை அண்டி பிழைக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளது கண்கூடு. பஞ்சாப், சத்தீஸ்கர், ராஜஸ்தான் மாநிலங்களை மட்டுமே சொற்ப வித்தியாசத்தில் ஜெயித்து ஆட்சியை நகர்த்தி வருகிறது. மற்ற ஒரு சில மாநிலங்களில் மற்றவர்களின் முதுகில் மட்டுமே சவாரி செய்யும் நிலை. இது தெரிந்தும்கூட தற்போதுவரை அக்கட்சியின் தலைவர்கள் கட்சியை பலப்படுத்தும் பணியை மேற்கொள்ள முயற்சிக்கவில்லை.

இந்நிலையில், தற்போது பா.ஜ.கவையும் மத்திய அரசையும் எதிர்க்க ஒரு போராட்ட குழுவை அறிவித்துள்ளது. அதன் தலைவராக திக்விஜய் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். பிரியங்கா உள்ளிட்டோர் அக்குழு உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் மத்திய அரசின் வளர்ச்சி திட்டங்களால் பாதிக்கப்பட்ட, ஒழுங்காக கணக்கு காட்டாத பல தொண்டு அமைப்புகள், பா.ஜ.கவை எதிர்க்கும் இடதுசாரிகள், காலாவதியான சில அறிவு ஜீவிகள், சார்பு ஊடகங்கள், சமூக ஆர்வலர்கள் என்ற பெயரில் ஒளிந்துகொண்டு போராடும் மாற்று மத கும்பல்கள், ஜார்ஜ் சோரஸ் போன்ற வெளிநாட்டு பணமுதலைகள், என பல்வேறு நபர்களை ஒருங்கிணைத்து ‘போராட்டக்குழு’ ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இந்த போராட்டக் குழுவினர், மத்திய அரசு, பா.ஜ.க, மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்கள், சி.ஏ.ஏ உள்ளிட்ட திடங்களை எதிர்த்து போராட்டங்கள் நடத்துவது, நாட்டில் அமைதியற்ற நிலையையும் குழப்பத்தையும் உருவாக்குவது, ஸ்திரத்தன்மையை குலைப்பது, உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளை ஒருங்கிணைப்பது, பொதுமக்களை குழப்புவது என தொடர்ச்சியாக செயல்படுவார்கள்.

இக்குழுவினர் முதற்கட்டமாக, செப்டம்பர் 27ம் தேதி பாரத் பந்த் நடத்த திட்டமிட்டுள்ளனர். அடுத்ததாக, 18 ஒத்த எண்ணம் கொண்ட எதிர்க் கட்சிகளுடன் இணைந்து மத்திய அரசுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களை நடத்தவும் காங்கிரஸ் அழைப்பு விடுக்க வாய்ப்புள்ளது. ஆட்சியை கைப்பற்ற இப்படி குறுக்கு வழிகளில் பகீரத பிரயத்தனம் செய்துவரும் காங்கிரஸ், இந்த முயற்சியை தன்னை திருத்திக்கொள்வதிலும், கட்சியை வளர்ப்பதிலும் காட்டினால் நன்றாக இருக்கும்.

# ஒரு புதிய பாதை உருவாக்கம்



காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (கே.வி.ஐ.சி) தனது தனித்துவமான முயற்சியாக, கோவா மாநிலத்தில் கொரோனாவால் தங்கள் கணவர்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்த 9 பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து உள்ளது. பாரதத்தில் ஒரு அரசு நிறுவனம் கொரோனா தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார ஆதரவை உருவாக்கி கொடுத்துள்ளது இதுவே முதல் முறை. அவர்களுக்குத் தெரிந்த ஆடை தைத்தல், வாகன பழுதுபார்ப்பு, பேக்கரி, பியூட்டி பார்லர், மூலிகை விற்பனையகம், முந்திரி பதப்படுத்தும் தொழில் உள்ளிட்டவைகளைத் துவங்க, பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா உதவியுடன் தலா 25 லட்சம் வழங்கப்பட்டது. அவர்கள் துவங்க உள்ள நிறுவனங்களால் சுமார் 70 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

# பிரம்மோஸ் தொழிற்சாலை




அதிநவீன பிரம்மோஸ் ஏவுகணைகளை தயாரிக்க லக்னோவில் 200 ஏக்கர் நிலத்தை உத்தர பிரதேச அரசு பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் ஜாயின்ட் வென்ச்சர் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. ஏவுகணைகள் தயாரிக்க ஒதுக்கப்படும் நிலத்தில் ரூ. 300 கோடி முதலீடு செய்யப்படும். பிரம்மோஸ் உற்பத்தி மையத்தில் சுமார் 500 பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், 10,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் 5,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். இங்குமேலும் 100 பிரம்மோஸ் ஏவுகணைகள் அடுத்த மூன்று ஆண்டுகளில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. பிரம்மோஸ் ஏவுகணை நமது பாரதத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ) மற்றும் ரஷ்யாவின் என்.பி.ஓ மஷினோஸ்ட்ரோயினியா நிறுவனத்தின் கூட்டு முயற்சியால் உருவானது. பிரம்மோஸ் ஏவுகணை மட்டுமே உலகின் தனித்துவமான, துல்லியமான, அதிவேக சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணை. இது ரஷ்யாவின் P800 ஓனிக்ஸ் குரூஸ் ஏவுகணையின் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டது.

# பழங்கால கோயில் புனரமைப்பு



குஜராத்தில் புகழ்பெற்ற கோயில்களில் ஒன்றாக கெடா மாவட்டத்தில் உள்ள பண்டைய கால கால்தேஸ்வர் மகாதேவ் கோயில் உள்ளது. இக்கோயிலில் பல அண்டுகளாக கோபுரம் இல்லாமல் இருந்தது. தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் இருந்த இக்கோயிலில் கோபுரம் அமைக்க கோரிக்கை விடப்பட்டது. பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த இக்கோரிக்கையை பரிசீலித்த பிரதமர் மோடி இதற்கு அனுமதி அளித்தார். அதனையடுத்து அங்கு கோபுர கட்டுமானப்பணிகள், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அங்கு 75 அடி உயர கோபுரம் தொல்பொருள் ஆய்வுத்துறையின் கண்காணிப்பின் கீழ் அமைத்து முடிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த அமாவாசை அன்று கோபுரத்தில் 52 கஜத்திலான புனித காவிக் கொடி ஏற்றப்பட்டது. இதில், கல்தேஷ்வர் கோயிலின் மோகன்தாஸ்ஜி மகாராஜ், நாடியட் சாந்த்ரம் கோயிலின் நிர்குந்தாஸ்ஜி மகாராஜ், மத்திய அமைச்சர் தேவுசின் சவுகான், குஜராத் துணைத் தலைவர் கோர்தன் ஜடாஃபியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# படையில் இணையும் கப்பல்கள்



பாரத கப்பற்படையில், இந்த வருட இறுதிக்குள்ளாக அடுத்தடுத்து நான்கு போர்க்கப்பல்களை படையில் இணைக்க உள்ளதாக பாதுகாப்பு அமைச்சக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. விசாகப்பட்டினம் ரக நாசகாரி கப்பல்களில் முதலாவதான ஐ.என்.எஸ். விசாகப்பட்டினம், ஸ்கார்பீன் ரக நீர்மூழ்கி கப்பல்களில் நான்காவதான ஐ.என்.எஸ் வேலா, செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாக ஏவுகணை கண்காணிப்பு கப்பலான ஐ.என்.எஸ். துருவ், கடைசியாக ஏவுகணை சோதனை கப்பலான ஐ.என்.எஸ். அவினாஷ் ஆகியவை படையில் இணைய உள்ளன. வரும் வருடங்களில் சுமார் 5 முன்னனி வகை கப்பல்கள் வரை படை இணைப்புக்கு தயாராகி வருகின்றன. உள்நாட்டிலேயே தயாராகும் விமானம் தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ் விக்ராந்தின் கட்டுமானமும் சோதனை ஓட்டமும் நல்லபடி நடந்து வருகிறது.

# அமைதி பாதையில் வடகிழக்கு



சுதந்திரம் அடைந்தது முதல் அன்றைய காங்கிரஸ் அரசு, வடகிழக்குப் பகுதிக்கு முக்கியத்துவம் அளிக்காததால் அங்கு பல இடதுசாரி பயங்கரவாத குழுக்கள் தோன்றின. அதனை சரி செய்ய பல்வேறு முயற்சிகளை நமது மத்திய அரசு எடுத்து வருகிறது. வடகிழக்குப் பகுதிக்கு தனி கவனம், வளர்ச்சி திட்டங்கள் போன்றவை செயல்படுத்தப்பட்டன. பயங்கரவாதிகள் தேசிய நீரோட்டத்திற்கு திரும்ப ஊக்கப்படுத்தப்பட்டனர். சிலர் அதிரடி நடவடிக்கைகளால் களையெடுக்கப்பட்டனர். இதனால் அங்கு அமைதி திரும்பி வருகிறது. இந்நிலையில், நாகாலாந்தின் தேசிய சோசலிஸ்ட் கவுன்சில், NSCNK (நிகிசுமி குழு) மத்திய அரசுடன் உடன் ஒரு வருடத்திற்கு சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மத்திய அரசு ஏற்கனவே என்.எஸ்.சி.என் (ஐ.எம்), என்.எஸ்.சி.என் (என்.கே), என்.எஸ்.சி.என் (ஆர்), என்.எஸ்.சி.என் (கே) – காங்கோ, என்.எல்.டி.எப் (எஸ்.டி) உள்ளிட்ட பிற நாகா குழுக்கள், போடோ போராளிகளுடன் ஏற்கனவே சண்டை நிறுத்தம் பேச்சுவார்த்தை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இதனால் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

# தனித்துவ பாதையில் பாரதம்




ஷாப்பிங் கலாச்சாரத்தால் பெருகிவிட்ட ஷாப்பிங் மால்கள், ஆன்லைன் வர்த்தகம் என சில்லறை பொருட்கள் விற்பனைத் துறை வேகமாக மாறி வருகிறது. இந்நிலையில் சமீபகால கொரோனா தாக்கம் காரணமாக உலகம் அதிவேகமாக டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி முன்னேறி வருகிறது. இதில் சில்லறை விற்பனைத் துறையும் தப்பவில்லை. இந்த நிறுவனமயமாக்கலில் பொதுவாக இரண்டு மாதிரிகள் உள்ளன. ஒன்று கிராக் டவுன் எனப்படும் அதீத கட்டுப்பாடுகளை விதிக்கும் சீனத்து கொள்கை மற்றொன்று லைசெஸ் ஃபேர் எனப்படும் அரசின் கட்டுப்பாடுகள் இன்றித் தனியார் வணிகத் தொழில்களை தங்கள் இஷ்டத்துக்கு செயல்பட அனுமதிக்கும் அமெரிக்க கொள்கை. இந்த இரண்டு கொள்கைகளுக்கும் இடையே நமது தேசத்திற்கு உகந்த வகையில், சில்லறை விற்பனை கடைகள் பாதிக்காத வகையில் ஒரு சமநிலையான கொள்கையை உருவாக்க பாரதம் முயற்சித்து வருகிறது.

# உலகம் நாடும் நம் பழங்குடி பொருட்கள்




பாரதம் சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் இவ்வருடம் முழுவதும் நடத்தப்படுகிறது. அவ்வகையில், ‘ஆத்மநிர்பர் பாரத்’, ‘வோக்கல் பார் லோக்கல்’ திட்டத்தின் கீழ் நமது பாரத அரசின் 75 வெளிநாட்டுத் தூதரகங்களில் நமது பழங்குடியின மக்களின் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்திய பழங்குடி கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (TRIFED) நிறுவனம் இந்த ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதில் பழங்குடியின மக்களின் கைவினைப் பொருட்கள், விவசாய பொருட்கள், மூலிகை மருந்துகள் என பல்வேறு பொருட்களும் காட்சிப்படுத்தப்படும். இதனால் நமது பாரத பாரம்பரிய பொருட்கள் குறித்த விழிப்புணர்வு அந்நாட்டினருக்கு வரும், அவர்கள் இதனை வாங்குவதால் பழங்குடியின மக்களின் வாழ்க்கை மேம்படும், ஏற்றுமதி அதிகரிக்கும்.

முன்னதாக சர்வதேச யோகா தினத்திற்கான கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, நியூயார்க்கில் உள்ள பாரத துணைத் தூதரகம் நியூயார்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில் யோகா, முழுமையான ஆரோக்கியம், ஆயுர்வேதம் சம்பந்தமாக ஒரு நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. 3,000 க்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர்,. சுமார் 8.5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பழங்குடியின தயாரிப்புகள் அங்கு விற்பனையாகின என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆச்சார்யா வினோபா பாவே



வினோபா பாவே எனப்படும், விநாயக் நரகரி பாவே, ஒரு பாரத அறப்போராட்ட வீரர். மனித உரிமைகள் ஆதரவாளர். இவர் பூமி தான இயக்கத்தை தொடங்கி வழிநடத்தியவர். இவர் காந்தியின் ஆன்மீக வாரிசாக கருதப்படுபவர். இவர் மராட்டிய மாநிலம் கொலபா எனும் ஊரில், நரசிம்புராவ்பாவே ருக்மணிதேவி தம்பதியருக்கு மகனாக பிறந்தார்.

இவரின் சகோதரர்கள் பல்கொபா பாவே, சிவாஜிபாவே இருவரும் சமூக சேவகர்கள். வினோபா பாவே சிறந்த ஹிந்து ஆன்மீக போதகர், மகாத்மா காந்தியுடன் இணைந்து பாரத விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக பங்கு கொண்டார். விடுதலை பெற்ற பாரதத்தில் நிலமற்ற ஏழை மக்களை கைதூக்கி விடுவதற்காக பெரிய நிலச் சுவான்தார்களிடம் இருந்து நிலங்களை தானமாக பெற்று, நிலம் இல்லாதோருக்கு கொடுக்கும் பூமிதான இயக்கத்தை 1951ல் ஆச்சார்யா வினோபா பாவே தொடங்கினார்.

வினோபா பாவே, நாடு முழுவதும் பயணம் செய்து பூமி தான இயக்கத்துக்காக பிரச்சாரம் செய்தார். அவருடைய சர்வோதயா ஆசிரமம் இந்த இயக்கத்தை ஒருங்கிணைத்து நடத்தியது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நன்கொடையாக பெறப்பட்டு நிலமற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. 13 ஆண்டுகள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நடைப் பயணமாகவே சென்று 2,95,054 ஏக்கர் நிலத்தை பூமி தான இயக்கத்திற்காக தானமாகப் பெற்றார்.

ஹிந்து சமயத்தினரின் முக்கிய நூல்களுள் ஒன்றான பகவத் கீதைக்கு உரை எழுதினார். அன்றைய பாரதப் பிரதமர் இந்திர காந்தியின் அவசரகால பிரகடனம், சர்வாதிகார போக்கை கண்டித்தார். எட்டு மொழிகளைக் கற்று அந்தந்த ஊரின் மக்களின் மொழியில் உரையாடினார். அவர் வாழ்நாளில் ஒன்றரை லட்சம் கிராமங்களில் நாற்பது லட்சம் ஏக்கர் நிலங்கள் பெறப்பட்டது. இத்திட்டம், பீகாரில் ராஜேந்திர பிரசாத்தின் வேண்டுகோளுக்கு இணங்க மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. வினோபா பாவேயின் மிகச்சிறந்த தேசிய சேவைகளை பாராட்டி அவரது மறைவுக்கு பின் 1983ல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

# அரசு வளர்ச்சியில் பைஜூ


இன்றைய டிஜிட்டல் டெக்னாலஜியை பயன்படுத்தி கற்பித்தலில் தனித்துவம் காட்டி, வியத்தகு பிசினஸ் மாடலை நிறுவியிருக்கும் ஸ்டார்ட் அப் நிறுவனம்தான் பைஜூஸ். பைஜூஸ் நிறுவனத்தை பெங்களூருவில் இருந்த தன் நண்பர் வீட்டின் மொட்டை மாடியில் ஆறு மாணவர்களோடு ஆரம்பித்தார் அதன் நிறுவனர் பைஜூ ரவீந்திரன். இவர் கேரளாவின் கண்ணூர் மாவட்டத்தில் பிறந்தவர். 2011ல் ஸ்டார்ட் அப் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட பைஜூஸ் நிறுவனம் இப்போது இந்திய கிரிக்கெட் அணியின் ஜெர்சி ஸ்பான்சர் என்ற அந்தஸ்த்தை பெற்றுள்ளது. சுமார் 70 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் பைஜூஸை பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிறுவனம், ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ், எட் டெக், கிரேட் அப், அமெரிக்க வாசிப்பு தளமான 'எபிக்' உட்பட எட்டு கல்வி நிறுவனங்களை இந்த ஒரு வருடத்தில் மட்டும் கையகப்படுத்தியுள்ளது. ஜே.இ.இ, நீட் உட்பட 25 பிரிவுகளில் 150 நுழைவுத் தேர்வுகளிற்கு பயிற்சி அளிக்கிறது பைஜூஸ். இந்த நிறுவனத்தில் சீன நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன என்பது சற்றே சிந்திக்கத்தக்கது.

# பாரதத்தில் மீண்டும் சிறுத்தை அறிமுகம்



மகாராஜா ராமானுஜ் பிரதாப் சிங் தியோ கடந்த 1947ல் பாரதத்தில் கடைசியாக மீதம் இருந்த மூன்று ஆசிய சிறுத்தைகளை வேட்டையாடி சுட்டு கொன்றார். அதில் இருந்து இந்த இனம் பாரதத்தில் இல்லாமல் போனது. நாம் சிறுத்தை என கூறுவது உண்மை சிறுத்தை அன்று. அதில் ஜாகுவார், சீட்டா, லெப்பர்ட், கருஞ்சிறுத்தை என நான்கு வகைகள் உள்ளன. இதில் அழிக்கப்பட்டது சீட்டா என்ற சிறுத்தை இனம். இதனால், பாரதத்தில் மீண்டும் சிறுத்தை இன்ங்களை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டது. இதற்காக நமீபியா மற்றும் தென்னாப்பிரிக்காவில் இருந்து முதற்கட்டமாக 15 சிறுத்தைகள் இவ்வருட கடைசியில் கொண்டுவரப்படுகின்றன. இவை மத்திய பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில் விடப்படும். அடுத்த 5 வருடங்களில் மொத்தமாக 50 சிறுத்தைகளை பாரதத்தில் உள்ள பல்வேறு காடுகளில் விட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் தென்மேற்கு மற்றும் மத்திய ஆசியாவிலிருந்து பாரதம் வரை பரவிய ஆசியச் சிறுத்தைகள் தற்போது ஈரானில் மட்டுமே உறுதியாகக் காணப்படுகிறது. சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தால் (ஐ.யு.சி.என்) ஆசியச் சிறுத்தை மிகவும் ஆபத்தானதாக பட்டியலிடப்பட்டுள்ளது. எனினும் சிறுத்தை மக்களை தாக்கியதற்கான ஆவண ஆதாரங்கள் இல்லை. அவற்றின் உணவு பட்டியலில் முதன்மையாக சிறிய பாலூட்டி இனங்களே உள்ளன. இவை வாழ புலியை விட கணிசமாக குறைந்த இடம் தேவைப்படுகிறது. அதாவது, ஒவ்வொரு சிறுத்தைக்கும் 10 முதல் 20 சதுர கிலோமீட்டர் நிலம் தேவை.

# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



பாரதியார் ஒரு கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலைப் போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல பரிமாணங்கலை கொண்டவர். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். பாரதியார் சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு டிசம்பர் 11, 1882ல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன்.

தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897ல் செல்லம்மாளை மணந்தார். எட்டையபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சிலகாலத்திலேயே, அப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார். அங்கு.1898 முதல் 1902 வரை தங்கினார். பாரதி தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காள மொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார்.

பாரதியார், முதலில் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். தம் வாழ்நாளின் இறுதியிலும் அவ்விதழின் உதவி ஆசிரியராகவே மறைந்தார். சக்கரவர்த்தினி என்ற மகளிர் மாத இதழிலும், இந்தியா என்ற வார இதழிலும் சூரியோதயம் கர்மயோகி தர்மம் என்ற இதழ்களிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். பாட்டுக்கொரு புலவனான பாரதி, பாடல்களின் இலக்கணக் கட்டுகளைத் தகர்த்தெறிந்தவர். இவருக்கு முன்பாகக் கவிபுனைந்த கவிஞர்கள், தொல்காப்பிய இலக்கணம் சிறிதும் வழுவாமல், பொருள்கொள், யாப்பு, அணி என இலக்கணத்தில் கட்டுண்டு கற்றோர் மட்டும் கற்றறியும் கவிதைகளையே புனைந்தனர்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசியக் கவியாகப் போற்றப்படுகிறார். தன்னுடைய தாய்நாட்டை நினைத்துப் பெருமை கொண்டதோடு அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பாரதிக்கு உண்டு. 1921ல் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை தாக்கியதால் நோய்வாய்ப்பட்டார். சில நாட்களுக்குப் பிறகு, கடும் வயிற்றுக் கடுப்பு நோயால் பாதிக்கப்பட்டார். பிறகு 1921 செப்டம்பர் 11ல் காலமானார். அவர் கடைசி நாட்களைக் கழித்தஇல்லம் திருவல்லிகேணியில் உள்ளது.

சுவாமி விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதையைத் தமது குருவாகக் கருதினார். பாரதியாரின் நூல்கள் தமிழக அரசினால் 1949ல் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. பாரதத்திலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதுதான்.